**ஜுன் – 06**

# TNPSC துளிகள்

- ஜுன் 21 ஆம் தேதியன்று நடைபெறவுள்ள சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யோகா நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி மையங்களை மக்கள் கண்டறிவதற்கு உதவியாக ஆயுஷ் அமைச்சகமானது "யோகா இருப்பிடம்" ('Yoga Locator') எனும் பெயருடைய கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய Quad என்றறியப்படும் அலுவல்சாரா மூலோபாய குழுவின் நாற்கரப் பாதுகாப்பு பேச்சு வார்த்தையானது சமீபத்தில் தாய்லாந்தின் பாங்காங்கில் நடைப்பெற்றது.

# தேசியச் செய்திகள்

## வணிகர்களுக்கான ஓய்வூதிய திட்டம்

- வணிகர் சமுதாயத்தினருக்கு ஓய்வூதியம் வழங்கும் புதியத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்துக் கடைக்காரர்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் சுய தொழில் செய்பவர்கள் அனைவருக்கும் 60 வயதினை அடைந்த பின்பு மாதந்தோறும் குறைந்தபட்சமாக 3000 ரூபாய் உறுதியாக ஓய்வூதியம் வழங்கப்படும்.
- 18லிருந்து 40 வயதுடைய மற்றும் 1.5 கோடி ரூபாய்க்கும் குறைவான GST வரி செலுத்தும் விற்பனை அளவையுடைய அனைத்து சிறு கடைக்காரர்களும் சுய தொழில் புரிவோர்களும் சில்லறை வர்த்தகர்களும் இத்திட்டத்தில் சேரலாம்.

## PM-KISAN திட்டத்தின் விரிவாக்கம்

- பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி (Pradhan Mantri Kisan Samman Nidhi-PM-KISAN) திட்டத்தின் உள்ளடக்க வரம்பை முழுமையாக விரிவாக்கம் செய்ய மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த முடிவினால், நிலங்களை வைத்திருக்கும் அனைத்து தகுதியான விவசாய குடும்பங்களும் (இது வழக்கமான விலக்களிப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டது) இத்திட்டத்தின் கீழ் பயனடைவர்.

### *பிரதான் மந்திரி சம்மான் நிதி*


- விவசாயிகளுக்கு வருமான ஆதரவு தரும் திட்டமான பிரதான் மந்திரி சம்மான் நிதியானது 2019 ஆம் ஆண்டு இடைக்கால பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது பாதகமான வானிலை மற்றும் குறைவான விலைகள் வழங்கப்படுவதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடையே நிலவும் அமைதியின்மைக்கு தீர்வு காண்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் அரசானது விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் 6000 ரூபாயை வழங்கும்.

## கால்நடை நோய்களை கட்டுப்படுத்துவதற்கான புதிய முயற்சி

- கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் கால் மற்றும் வாய் நோய் (Foot and Mouth Disease-FMD) மற்றும் புருசெல்லோசிஸ் (Brucellosis) ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான புதிய முயற்சிக்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் கால்நடைகளில் பரவும் இந்த நோய் முழுவதையும் முற்றிலுமாககே கட்டுப்படுத்துவதையும் அதனைத் தொடர்ந்து இந்நோயை முற்றிலும் ஒழிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *கால் மற்றும் வாய் நோய் (FMD) மற்றும் புருசெல்லோசிஸ்*

- இந்த நோய்களானது பசு, எருமைகள், செம்மறி, ஆடு மற்றும் பன்றி போன்ற கால்நடைகளில் பரவும் பொதுவான நோய்களாகும்.
- பசு அல்லது எருமை இந்த FMD நோயால் பாதிக்கப்பட்டால் அதன் தாக்கம் நான்கு முதல் ஆறு மாதங்கள் வரை நீடிக்கும். இந்தத் தாக்கத்தினால் அதன் கறவை திறன் 100 சதவீதம் வரை குறையும்.
- மேலும் புருசெல்லோசிஸ்ஸால் பாதிக்கப்படும் கால்நடைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் 30 சதவீத அளவிற்கு கறவைத் திறனை இழக்கின்றன.
- இந்நோயானது விலங்குகளிடையே மலட்டுத் தன்மைக்கு காரணமாகிறது.
- இதன் தாக்கமானது பண்ணைத் தொழிலாளர்கள் மற்றும் கால்நடை உரிமையாளர்களுக்கும் பரவுகின்றது.




## பிரதமரின் உதவித் தொகைத் திட்டம்

- தேசிய பாதுகாப்பு நிதியத்தின் கீழ் உள்ள பிரதமரின் உதவித் தொகைத் திட்டத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- அமைச்சரவையானது உதவித் தொகையை சிறுவர்களுக்கு 2000 ரூபாயிலிருந்து ரூ2500 ஆகவும் சிறுமிகளுக்கு 2250 ரூபாயிலிருந்து ரூ.3000 ஆகவும் உயர்த்தியுள்ளது.

- பயங்கரவாத/நக்சலைட்டுகள் தாக்குதலின் போது உயிர்த் தியாகம் செய்த மாநில காவல் துறை அதிகாரிகளின் குழந்தைகளுக்கும் இந்த உதவித் தொகையின் வரம்பானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் காவல் துறை அதிகாரிகளுக்கான புதிய ஒதுக்கீடு வருடத்திற்கு 500 ரூபாய் ஆக உள்ளது.
- இந்த விவகாரத்திற்கு மத்திய உள்துறை அமைச்சகமானது ஒப்புதல் வழங்கு நிறுவனமாகச செயல்படும்.

### *தேசிய பாதுகாப்பு நிதியம்*

- தேசிய பாதுகாப்பு நிதியமானது 1962 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது தேசிய பாதுகாப்பு முயற்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு அளிக்கப்படும் தன்னார்வ நன்கொடைகளை ரொக்கமாக வசூலிப்பதையும் அதன் பயன்பாட்டைத் தீர்மானிக்கும் பணிகளையும் மேற்கொள்கிறது.
- தற்போது இந்த நிதியானது ஆயுதப்படை, துணை இராணுவத்தினர் மற்றும் ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நல்வாழ்விற்காக பயன்படுத்தப்படுகின்றது.
- இந்த நிதியமானது பிரதமரைத் தலைவராகவும், பாதுகாப்பு, நிதி மற்றும் உள்துறை அமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றது.

## ஸ்விப்ட் இந்தியா மற்றும் தெற்காசியா மாநாடு

- ஸ்விப்ட் இந்தியா மற்றும் தெற்காசியா மாநாடானது மும்பையில் நடைபெற்றது.
- இம்மாநாடானது உலகளாவிய வங்கிகளுக்கிடையேயான நிதியியல் தொலைத் தொடர்புக்கான சங்கம் (Society for Worldwide Interbank Financial Telecommunication) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இம்மாநாட்டின் கருத்துருவானது, “பரிமாணாத்தில் டிஜிட்டல் மயமாக்கல் : புத்தாக்கம் மற்றும் இணைய ப்பாதுகாப்பின் எதிர்காலம்” என்பதாகும்.

## உட்சாலோ முன்முயற்சி

- காயமுற்று சக்கர நாற்காலியில் முடங்கியிருக்கும் இராணுவ வீரர்களை தற்சார்புடையவர்களாக மாற்றுவதற்கான ஒரு முயற்சியாக “உட்சாலோ” என்ற முன்முயற்சியை இராணுவத்தின் முடவியல் மறுவாழ்வு மையமானது தொடங்கியுள்ளது.
- உட்சாலோ என்பது இராணுவ மற்றும் துணை இராணுவப் படையைச் சேர்ந்த வீரர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பு கட்டணம் மற்றும் பிரத்தியேகத் தள்ளுபடிகளை வழங்கும் ஒரு பயணத் தளமாகும்.
- இது ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த பிரத்தியேக முன்முயற்சியானது சக்கர நாற்காலியில் முடங்கியிருக்கும் ராணுவ வீரர்களின் வாழ்வில் ஒரு புதிய உத்தியை வழங்கியிருக்கின்றது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## புது டெல்லிக்கு சிவப்பு நிற எச்சரிக்கை

- இந்திய வானிலை ஆராய்ச்சி மையமானது தேசியத் தலைநகரத்திற்கு சிவப்பு நிற எச்சரிக்கையை வழங்கியுள்ளது.
- வானிலை ஆய்வு மையமானது மொத்தமாக பச்சை, மஞ்சள், பொன்னிறம் மற்றும் சிவப்பு ஆகிய நான்கு எச்சரிக்கை நிறங்களைக் கொண்டுள்ளது.
- பச்சை நிறமானது இயல்பான சூழலையும் சிவப்பு நிறமானது மிகவும் மோசமான வானிலைச் சூழலையும் குறிக்கின்றது.

## இந்திய இராணுவத்தின் “Go Green” முன்முயற்சி

- மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தாவில் வில்லியம் கோட்டை மையத்தில் உள்ள கிழக்கு கட்டுப்பாட்டுத் தலைமையகத்தில் “தொடர்ச்சியான சுற்றுச்சூல் காற்று கண்காணிப்பு அமைப்பை” இந்திய ராணுவமானது செயல்நிலைப் படுத்தியுள்ளது.
- இந்த காற்று தர கண்காணிப்புப் அமைப்பின் செயல்நிலைப் படுத்துதலானது இந்திய இராணுவத்தால் ஏப்ரல் 2019-ல் நாடு முழுவதும் துவக்கப்பட்ட “Go Green” என்ற முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.
- இது காற்றின் வீசும் திசை, காற்று மாசுபாடு, சுற்றுப்புற வெப்பநிலை, ஒப்பீட்டு ஈரப்பதம், வெப்பக் கதிர்வீச்சு, வளிமண்டல அழுத்தம் மற்றும் மழை அளவை ஆண்டு முழுவதும் அளவிடும்.
- இது கொல்கத்தாவின் ஆறாவது தொடர்ச்சியான சுற்றுச்சூழல் காற்று கண்காணிப்பு அமைப்பாகும்.

# மாநிலச் செய்திகள்

## எலிபெண்டா திருவிழா

- இரண்டு நாட்களுக்கு நடைபெறும் எலிபெண்டா திருவிழாவானது மும்பையின் காராபூரி தீவில் நடைபெற்றது.
- இத்திருவிழாவானது மகாராஷ்டிர சுற்றுலா மேம்பாட்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இந்நிறுவனமானது சுற்றுலா மற்றும் மும்பையின் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக வருடந்தோறும் இத்திருவிழாவினை ஏற்பாடு செய்கின்றது.
- பாரம்பரிய தளமான எலிபெண்டா குகையை மட்டுமல்லாமல் நகரத்தின் பாரம்பரியத்தினையும் கொண்டாடும் இத்திருவிழாவானது 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## உதவித்தொகை பெறுவதற்கான வருடாந்திர வருமான வரம்பு உயர்வு

- அஸ்ஸாம் மாநில அரசானது மாணவர்கள் தங்கள் முதுகலைப் பட்டப்படிப்பு வரையிலான படிப்பிற்கு உதவித் தொகை பெறுவதற்காக அவர்களின் பெற்றோரின் வருடாந்திர வருமான உச்ச வரம்பை 1 லட்சத்திலிருந்து 2 லட்சமாக உயர்த்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது அஸ்ஸாமின் தனியார் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்குப் பொருந்தாது.
- மத்திய மற்றும் மாநில அரசில் பணிபுரியும் பெற்றோர்களின் குழந்தைகளும் இத்திட்டத்தில் பயனடைய தகுதியற்றவர்கள் ஆவர்.

## "ஆப்கி பேட்டி" திட்டம் - ராஜஸ்தான்

- ராஜஸ்தான் மாநில அரசானது "ஆப்கி பேட்டி" திட்டத்தின் கீழ் பள்ளிச் சிறுமிகளுக்கு வழங்கி வந்த நிதியுதவியை உயர்த்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள மற்றும் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இறந்த பள்ளிச் சிறுமிகளுக்கு மாநிலத்தில் நிதியிதவி அளிக்கப்படும்.
- உதவித் தொகையானது 1 முதல் 8 வரை பயிலும் சிறுமிகளுக்கு 1100 ரூபாயிலிருந்து 2100 ரூபாயாகவும் 9 முதல் 12 வகுப்பு வரை பயிலும் சிறுமிகளுக்கு 1500 ரூபாயிலிருந்து ரூ2500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## தெலுங்கானா உருவான நாள் – ஜுன் 02

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 02 ஆம் நாள் தெலுங்கானா மாநிலம் உருவான நாள் கொண்டாடப்படுகின்றது.
- 2014 ஆம் ஆண்டு ஜுன் 02 ஆம் நாள் தெலுங்கானாவானது, 29 ஆவது மாநிலமாக

அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்கான ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டமானது நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
- இது ஆந்திரப் பிரதேசத்தின் 10 வட மேற்கு மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும்.




- - - - - - - - - - - - - - -